CNR NO.TNTI210001832020

**பல்லடம் சார்பு நீதிமன்றம்**

முன்னிலை திரு.எஸ்.சந்தானகிருஷ்ணசாமி, பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, பல்லடம்

**2022–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12–ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

திருவள்ளுவர் ஆண்டு 2053 ஆடித் திங்கள் 27–ஆம் நாள்

**அசல் வழக்கு எண்.53/2020**

திருமதி.சரஸ்வதி .... வாதி

/எதிர்/

திருமதி.ராஜேஸ்வரி .... பிரதிவாதி

24.08.2020–ஆம் தேதியன்று கோப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த வழக்கானது கடந்த 11.08.2022–ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிக்காக வழக்கறிஞர் திரு.S.வெங்கடாசலம் அவர்களும், பிரதிவாதி வழக்கறிஞர் திரு.K.கோபாலகிருஷ்ணன் அவர்கள் மூலம் ஆஜராகியும் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினராகக் கருதப்பட்டும், வாதி தரப்பில் எடுத்துரைத்த வாதங்களைக் கேட்டும் வழக்குக் கோப்புகளைப் பரிசீலித்தும் இந்நாள்வரை நிலுவையிலிருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**தீ ர் ப் பு ரை**

வாதிக்குப் பிரதிவாதி கிரைய பாக்கித் தொகை ரூ.50,000/–ஐப் பெற்றுக் கொண்டு தாவா சொத்துக்களைக் கிரையம் செய்து கொடுக்கவும் அல்லது மாற்றுப்பரிகாரமாக ரூ.5,50,000/–ஐ 12% பின் வட்டியுடன் செலுத்தவும்

S SANTHANAKRISHNASAMY

Digitally signed by S SANTHANAKRISHNASAMY
Date: 2022.08.12 19:11:40 +0530

மற்றும் செலவு தொகைக்காகவும் வாதி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

**01. வழக்கின் சுருக்கம்**

தாவா சொத்துக்கள் எண்.3589/2018 கொண்ட 05.04.2018 தேதிய செட்டில்மெண்ட் பத்திரப்படிப் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டு அவரது சுவாதீன அனுபோகத்தில் உள்ளார். தாவா சொத்தைப் பிரதிவாதி வாதிக்கு ரூ.6,00,000/– கிரையம் பேசிக் கடந்த 06.08.2018 அன்று சாட்சிகள் முன்னிலையில் ரூ.5,50,000/–ஐ முன்பணமாகப் பெற்றுக் கொண்டு, மீதிக் கிரையத் தொகை ரூ.50,000/–ஐ இரண்டு வருட காலக்கெடுவிற்குள் செலுத்திக் கிரையம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும், தவறும்பட்சம் மேற்படி முன்பணத்தை இழந்துவிட வேண்டியது என்ற ஷரத்துக்களுடன் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திப் பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவும் செய்யப்பட்டுள்ளது. அன்றைய தேதியிலேயே பிரதிவாதி தனது பெயரிலுள்ள அசல் ஆவணத்தை வாதியிடம் ஒப்படைத்துள்ளார்.

**1.2.** பின்னிட்டு வாதி பாக்கிக் கிரையத் தொகை மற்றும் கிரையச் செலவுத் தொகைகளையும் தயார் செய்து கொண்டு பலமுறை அலைபேசி மூலமும், நேரிலும் பிரதிவாதியைத் தொடர்பு கொண்டு கிரையம் கொடுக்குமாறு வேண்டினார். ஆனால் பிரதிவாதி வீண் சாக்குப்போக்கு சொல்லிக் காலம் கடத்தி வந்தார். பின்னிட்டுப் பிரதிவாதி அதிக தொகைக்கு ஆசைப்பட்டுத் தாவா சொத்துக்களை வில்லங்கப்படுத்த முயற்சிப்பதாக வாதிக்குத் தெரிய வந்தது. அதனால் வேறு வழியில்லாமல் கடந்த 15.06.2020 ஆம் தேதியன்று வழக்கறிஞர் மூலம் வரும் 01.07.2020 ஆம் தேதியான புதன்கிழமையன்று பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் பெறக் காத்திருப்பதாக அறிவிப்பு அனுப்பினார். அதைக் கடந்த 16.06.2020 ல் பெற்றுக் கொண்ட பிரதிவாதி வாதியை நேரில் அணுகி 15.08.2020 தேதி வரை கால அவகாசம் உள்ளது என்றும், ஆகையால் ஆகஸ்ட் முதல் வாரத்திற்குள் மீதிக் கிரையத் தொகையைப் பெற்றுக் கொண்டு கிரையம் செய்து கொடுப்பதாக வாய்மொழியாக உறுதியளித்தார்.

S SANTHANAKRISHNASAMY

Digitally signed by S SANTHANAKRISHNASAMY
Date: 2022.08.12 19:11:49 +0530

**1.3.** பின்னிட்டு மீண்டும் வரும் 12.08.2020 ஆம் தேதியன்று பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரையம் பெறக் காத்திருப்பதாகக் கூறிப் பிரதிவாதிக்குக் கடந்த 22.07.2020 அன்று அறிவிப்பு அனுப்பினார். அதைக் கடந்த 23.07.2020 அன்று பிரதிவாதி பெற்றுக் கொண்டார். அதன்படி கடந்த 12.08.2020 ஆம் தேதியன்று காலை 10.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை வாதி சார்பதிவாளர் அலுவலகத்தில் காத்திருந்தார், அதற்கு ஆதரவாகப் பல புகைப்படங்கள் எடுத்துள்ளார். எனவே வாதி வேறு வழியின்றி ஏற்றுதலை ஆற்றுகப் பரிகாரமோ அல்லது மாற்றுப் பரிகாரமோ கோரி இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

**02. எதிர் வழக்குரையின் சுருக்கம் –**

பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் ஆஜராகிப் பின்னர் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் தோன்றாத்தரப்பினராகக் கருதப்படுகிறார்.

03. **தீர்வுகாண வேண்டிய பிரச்சனை**

இந்த வழக்குப் பரிகாரம் வாதிக்குக் கிடைக்கத்தக்கதா?

**04. தீர்வுமுடிவு**

வாதி வா.சா.–1 ஆகவும், ஒரு சாட்சி சபாபதி என்பவர் வா.சா–2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**4.2.** தாவா சொத்துக்கள் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் வகையில் பாத்தியப்பட்டதாகவும், தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதி கிரையம் பெறுவதாகக் கூறிக் கடந்த 16.08.2018 ஆம் தேதியில் கிரையத் தொகை ரூ.6,00,000/– என நிர்ணயம் செய்து ரூ.5,50,000/–ஐ வாதியிடம் பிரதிவாதி முன்பணமாகப் பெற்றுக் கொண்டு மீதிக் கிரையத் தொகையான ரூ.50,000/–ஐ 2 வருட காலக்கெடுவுக்குள் செலுத்திக் கிரையம் பெற்றுக் கொள்ள வேண்டும் என ஒப்புக் கொண்டு பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு

S SANTHANAKRISHNASAMY
Digitally signed by S SANTHANAKRISHNASAMY
Date: 2022.08.12 19:12:01 +0530

கிரைய உடன்படிக்கை செய்து கொண்டதாகவும், அதன்படி வாதி எப்போதும் கிரைய பாக்கித் தொகை கொடுத்துக் கிரையம் பெறத் தயாராக இருந்து வருவதாகவும், பிரதிவாதி வேண்டுமென்றே கிரையம் செய்து கொடுக்க மறுத்து வேறு 3 ஆம் நபர்களுக்கு தாவா சொத்தைப் பொறுத்து வில்லங்கப்படுத்த முயல்வதாகவும், எனவே வாதி கடந்த 15.06.2020 மற்றும் 22.07.2020 ஆகிய தேதிகளில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், இரு அறிவிப்புகளையும் பெற்றுக் கொண்ட பிரதிவாதி முதல் அறிவிப்பு பெற்றவுடன் ஆகஸ்ட் முதல் வாரத்தில் கிரையம் எழுதித் தருவதாகக் கூறியதாகவும், பின்னிட்டு அதன்படி நடக்கவில்லை என்றும், வாதி கடந்த 12.08.2020 ஆம் தேதியன்று பல்லடம் சார்பதிவாளர் அலுவலகத்தில் காலை 10 மணி முதல் 5 மணி வரை காத்திருந்தும் பிரதிவாதி கிரையம் செய்து கொடுக்கவில்லை என்றும், எனவே வேறு வழியின்றி இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சிய, சான்றாவணங்களின் வாயிலாகவும் தெரிய வருகிறது.

**4.3.** மேலும் வா.சாஆ.2 ஆவணத்தைப் பரிசீலிக்கையில் மேற்படி ஒப்பந்தமானது கடந்த 16.08.2018 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஒப்பந்தத்தின் காலக்கெடுவானது 2 வருடங்கள் அதாவது 15.08.2020 அன்றுடன் முடிவடைகிறது. அதற்கு முன்னதாகவே வாதி கிரைய பாக்கித் தொகையுடன் கிரையம் பெறத் தயாராக இருப்பதாகப் பலமுறை பிரதிவாதிக்கு நேரிலும் அரைபேசி வாயிலாகவும் தெரிவித்துள்ளார். மேலும் வா.சா–2 சாட்சியமும் வா.சா.1 ன் சாட்சியத்தை ஒத்துரைத்து அமைந்துள்ளது. எனவே மேற்படி ஏற்றதை ஆற்றுக பரிகாரம் பெற வாதி தகுதியானவர் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**4.4.** மேலும் மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தைப் பரிசீலிக்கையில் மேற்படி கிரைய ஒப்பந்தமானது சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் வாயிலாக மேற்படி வாதியானவர் பிரதிவாதிக்கு 16.08.2018 தேதியிலேயே கிரையத் தொகையின் பெரும்பகுதித் தொகையான ரூ.5,50,000/–ஐ முன்பணமாகச் செலுத்தியுள்ளது தெளிவாகிறது. வா.சா.ஆ.7 ஆவணமான புகைப்படத்தைப் பரிசீலிக்கையில் வாதி கிரைய ஒப்பந்தக் காலக்கெடுவிற்கு

S
SANTHANAKRISHNASAMY

Digitally signed by S SANTHANAKRISHNASAMY
Date: 2022.08.12 19:12:10 +0530

முன்னதாகவே கிரைய பாக்கித் தொகையுடன் தயாராக இருந்தார் என்பதும் தெளிவாகிறது.

**4.5.** எதிர்மனுதாரர் அழைப்பாணை பெற்று வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் தோன்றியும், எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் தோன்றாத் தரப்பினராகக் கருதப்பட்டார், வழக்குச் சங்கதிகளை மறுத்து எதிர்வழக்காடவும், மனுதாரரின் சாட்சியத்தை மறுத்துக் குறுக்கு விசாரணை செய்யவும் முன்வரவில்லை. மேலும் வாதி தரப்பு வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணச் சான்று மூலமாக முன் தொகை செலுத்தப்பட்டது மற்றும் கிரைய பாக்கித் தொகையுடன் தயார் நிலையில் இருந்த சங்கதிகளையும் வாதி நிரூபணம் செய்துள்ளார். எனவே வாதி கோரியுள்ளபடி ஏற்றுதலை ஆற்றுக பரிகாரம் வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந் நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதி முடிவு**

இறுதியாக, வழக்கு அனுமதிக்கப்பட்டு வாதிக்குப் பிரதிவாதி கிரைய பாக்கித் தொகை ரூ.50,000/-ஐப் பெற்றுக் கொண்டு இரண்டு மாத காலத்திற்குள் தாவா சொத்துக்களைப் பொறுத்துக் கிரைய ஆவணம் எழுதித் தரவேண்டுமென்று செலவு தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது. பாக்கிக் கிரையத் தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய 2 மாத காலம் அவகாசம்.

இந்தத் தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டபின் 2022-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12-ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

S SANTHANAKRISHNASAMY
Digitally signed by S SANTHANAKRISHNASAMY
Date: 2022.08.12 19:12:19 +0530

**சார்பு நீதிபதி**
**பல்லடம்**

**வாதி தரப்புச் சான்றாளர்கள்**

வா.சா–01 திருமதி.சரஸ்வதி

வா.சா–02 திரு.சபாபதி

**வாதி தரப்புச் சான்றாவணங்கள்**

| வ.எண் | தேதி | விபரம் | தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ–1 | 05.04.2018 | செட்டில்மெண்ட் பத்திரம் | நகல் |
| வா.சா.ஆ–2 | 16.08.2018 | கிரைய ஒப்பந்தம் | அசல் |
| வா.சா.ஆ–3 | 15.06.2020 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ–4 | 16.06.2020 | அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| வா.சா.ஆ–5 | 22.07.2020 | வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் |
| வா.சா.ஆ–6 | 23.07.2020 | அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் |
| வா.சா.ஆ–7 | 12.08.2020 | புகைப்படங்கள் மற்றும் குறுந்தகடு | அசல் |
| வா.சா.ஆ–8 | 17.07.2020 | வில்லங்கச் சான்று | இணைய நகல் |

**பிரதிவாதி தரப்புச் சான்றாளர்கள் – சான்றாவணங்கள் – இல்லை**

S SANTHANAKRISHNASAMY

Digitally signed by S SANTHANAKRISHNASAMY
Date: 2022.08.12 19:12:46 +0530

**சார்பு நீதிபதி**
**பல்லடம்**